# சேனைமுதலி ஆறு.



நீலநிறத்துடன் தம்முடைய திருக்கரங்களில் ,

சங்கு, சக்ரம், கதைஇவற்றை பாங்குற ஏந்தி;

மாலவனின் சேனையின் தலைவராக நின்று ,

எங்கும் ஆட்சிசெலுத்திடும் விஷ்வக்ஸேநரே! 1.

சூத்ரவதி உன்துணைவியாய் உடன் இருந்திட ,

ஈரேழு உலகத்தினையும் நீர்அழகுற ஆண்டிட;

வேத்ரவதி என்கின்ற கைப்பிரம்பினைத் தாங்கி ,

ஊரேவும்மைப்போற்றிட என்றும் இருப்பவரே! 2.

அநந்தன், கருடன் இவர்களைப் போன்று நீரும் ,

நித்யசூரிகளின் வரிசைதனில் அழகுற சேர்ந்து;

அநந்தனான எம்பெருமானின் மனம் குளிர்ந்திட ,

நித்தம் அவருக்கு பணிவிடைகளை செய்பவரே! 3.



நான்குவேதங்களை திருமகளிடம் பயின்று ,

குருபரம்பரைதனில் நீரும் அழகுற இருந்து ;

பாங்குடன் அவற்றை செந்தமிழில் வழங்கிட ,

குருகூரினில் சடகோபனாக அவதரித்தவரே ! 4.

இடர்களைக் களைந்திட உம்மைதொழுதால் ,

ஆதவனைக்கண்ட பனிபோல் விலகியோடும் ;

சுடர்விட்டு நம்வாழ்வும் செழித்திடுமென்றே ,

மாதவனின் சேனைத்தலைவரே வந்திட்டேன் ! 5.

விதியின் பயனாய் இந்த பூவுலகினில் பிறந்து,

அல்லல்கள் அனுபவிக்கும் பொய்கையடியான் ;

கதியின்றி உன்தன் திவ்யத் திருநாமங்களை ,

சொல்லப் புகுந்தேன் எம்மிடர் களைவாயென்று ! 6.

**************************************************************